# சூரியவெவ பிரதேச சபை
# ஹம்பாந்தோட்டை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 23 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 03 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஜுலை 31 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள சூரியவெவ பிரதேச சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

நிதிசார் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குச் சபை கடைப்பிடித்த கணக்கீட்டுக் கொள்கை வெளிக்கொணரப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) சூரியவெவ கிரிக்கட் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டி தொடர்பாக 2012 மே 24 ஆந் திகதிய 10426 ஆம் இலக்க பற்றுச்சீட்டு மூலம் இலங்கை கிரிக்கட் நிறுவனத்திடமிருந்து ரூபா 2,775,600 விநோத வரியாகச் சபைக்குக் கிடைக்கப்பெற்றது. இது பிரதான பேரேட்டில் வருவாயாக வைப்புக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக வரவு வைக்கப்பட்டிருந்தது. இத் தொகையில் ரூபா 1,043,760 விற்பனை செய்யப்படாத டிக்கட்களது பெறுமதியாக கிரிக்கட் நிறுவனத்திற்குத் திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது. இத்தொகை பிரதான பேரேட்டில் வருவாயின் பொருட்டு வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக செலவு வைக்கப்பட்டிருந்தது. இவ்வாறாக

வைப்புக் கணக்கில் வரவு மற்றும் செலவு மீதிகள் மாற்றத்திற்குள்ளாகிக் குறிப்பிடப்பட்டமையால் ஆண்டின் வருவாயாகக் கணக்கிலிடப்பட வேண்டிய ரூபா 1,731,840 வருவாயானது கணக்கிலிடப்படாததுடன் வைப்புக் கணக்கின் மீதியும் கணக்கில் சரிவர நிரூபணமாகவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டிற்குரிய வேலைக்கு மீளாய்வாண்டின்போது ரூபா 14,826,385 பெறப்பட்டிருந்தது. எனினும், வேலைக் கடன்பட்டோர் கணக்கில் செலவு வைக்கப்பட்ட தொகை ரூபா 10,857,761 மாத்திரமே.

(இ) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நீதிமன்றத் தண்டப் பண நிலுவைக் கணக்கின் பிரகாரம் ரூபா 1,721,315 காட்டப்பட்டபோதும், கோவையின் பிரகாரம் நீதிமன்றத் தண்டப் பண நிலுவை ரூபா 1,201,882 ஆகும். அதற்கமைய, ரூபா 519,433 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை**

பதினைந்து கணக்கீட்டு விடயங்களது ரூபா 9,508,671 கூட்டுத்தொகைக்குரிய சான்றுகளும் தகவல்களும் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 5,369,253 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 443,030 ஆகும்.

**2.2 வருவாய் நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன**

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான |
|---|---|---|---|

(அ) மீளாய்வாண்டு முடிவிலான அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவை ரூபா 24,950 ஆகும். அதனை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 152(4) பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தனியார் வகுப்புகள் நடாத்தப்படும் 4 நிலையங்களிலிருந்தும் 2 நொத்தாரிசு அலுவலகங்களிலிருந்தும் 2012 ஆம் ஆண்டின் பொருட்டு சபை வரி எதனையும் அறவிட்டதாகத் தென்படவில்லை.

### 2.2.5 விளம்பரப் பலகைக் கட்டண வருவாய்

மீளாய்வாண்டு முடிவில் 5 தனியார் வர்த்தக நிறுவனங்களிலிருந்து விளம்பரப் பலகைக் கட்டணமாக ரூபா 1,178,200 அறவிடப்பட வேண்டியிருந்தது. மேலும், அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பிரசார விளம்பரங்கள் சம்பந்தமாகக் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்தும் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,721,315 நீதிமன்றத் தண்டப்பணமாகவும் ரூபா 27,500 முத்திரைக் கட்டணமாகவும் பெறப்பட வேண்டியிருந்தது.

## 2.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்துவதுமான பௌதீக வளங்கள்

நடமாடும் நூலகம் ஒன்றை நடாத்துவதற்காக ரூபா 1,065,176 பெறுமதியான பொருட்கள் 2007 ஆம் ஆண்டில் ஆசிய மன்றத்திலிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டின் ஆரம்ப காலம் வரையுமே நடமாடும் நூலகம் செயற்பட்டிருந்தது. கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட 2012 நவம்பர் வரை அவ்வுபகரணங்கள் பயனுள்ள தேவைகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

**பின்வருவன அவதானிக்கப்பட்டன.**